வேளாளர் மகளிர் கல்லூரிவிடுதி
திண்டல், ஈரோடு -12

அன்புடையீர் வணக்கம்.

விடுதியில் தங்கிப் படித்துவரும் மாணவியர் நலன் கருதி பின்வரும் விதிமுறைகளைப் பெற்றோர்கள் கட்டாயம் கடைபிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

1. விடுதியில் எந்த மாணவியும் விலைமதிப்புள்ள நகைகளையோ, அதிகமான பணத்தையோ வைத்திருத்தல் கூடாது. அதனால் ஏற்படும் எந்த இழப்புக்கும் நிர்வாகம் பொறுப்பாகாது.

2. ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது சனிக்கிழமை, ஞாயிற்றுகிழமை ஆகிய இரு நாட்களில் மட்டுமே மாணவிகளைப் பார்க்கவும், வீட்டிற்கு அழைத்துச் செல்லவும், பெற்றோர்கள் அனுமதிக்கப்படுவர்.

3. அவ்விருநாட்களிலும் மாணவியரைப் பெற்றோர்கள் பார்க்க அனுமதிக்கப்படும் நேரம் காலை 10 மணிமுதல் 5 மணிவரை மட்டுமே. மாலை 5 மணிக்குமேல் எக்காரணத்தை முன்னிட்டும் பெற்றோர்கள் கல்லூரி வளாகத்திற்குள் இருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. வீட்டில் ஏற்படும் அசந்தர்ப்பம் காரணமாக மாணவிகளை இரவில் அழைத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். காலை 6 மணிக்குமேல் அழைத்துச் செல்லலாம்.

5. சில மாணவியர் இரண்டாவது சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை விடுமுறையிலோ அல்லது மற்ற விடுமுறை நாட்களிலோ (தீபாவளி, பொங்கல்) வீட்டிற்குச் சென்றுவிட்டு கல்லூரி வகுப்புகளுக்கு மட்டும் கல்லூரி திறக்கும் நாளில் வந்துவிட்டு, விடுதிக்கு வராமல் நண்பர்கள் உறவினர்கள் வீட்டிலிருந்து வருகின்றனர். இது விடுதி விதிமுறைகளுக்குப் புறம்பானது. அவ்வாறு வரும் மாணவியர் கல்லூரி விடுதியிலிருந்து உடனடியாக வெளியேற்றப்படுவர்.

மாணவியரை பெற்றோரே வந்து அழைத்துக் கொண்டு செல்வது போல் அவர்களை மீண்டும் விடுதிக்கு பெற்றோர்களே அழைத்துக் கொண்டு வந்து மேட்ரனிடம் ஒப்படைக்கவேண்டும். அதற்கு மாறாக ஈரோடு பஸ் ஸ்டாண்டிலோ அல்லது திண்டல் பஸ்ஸை விட்டு இறக்கி கேட்டில் மாணவியரைவிட்டுச் செல்லக் கூடாது. விடுமுறை முடிந்து விடுதிக்கு திரும்பவும் மாணவியர் எக்காரணம் கொண்டும் மாலை 5 மணிக்கு மேல் வருதல் கூடாது.

6. மாணவிகள் வீட்டிற்கு வருவதற்கு அனுமதிக் கடிதம் மூலம் அனுமதிக்க இயலாது. பெற்றோர் நேரில் வந்துதான் அழைத்துச் செல்லவேண்டும்.

7. விலங்கியல் மற்றும் தாவரவியல் வகுப்பு மாணவியருக்கு மட்டும் கல்வித் தொடர்பான சுற்றுலா செல்வதற்கு அனுமதி வழங்கப்படும், மற்ற வகுப்பு மாணவியருக்கு சுற்றுலா செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

8. இரவில் 10.30 மணிஅளவில் மாணவிகள் கண்டிப்பாக படுக்கைக்குச் செல்லவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் இரவு 10.30 மணிக்குமேல் விளக்குகள் எரிக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. மாணவியர்கள் அவர்களுக்கென்று குறிப்பிடும் அறைகளிலேயே தங்க வேண்டும். அவர்கள் விருப்பம் போல் அறைகளை மாற்றிக் கொள்ள கூடாது.

10. விடுதியில் மாணவியர் படிக்கும் நேரத்தை (I Study: 6 PM to 8 PM & II Study: 9 PM to 10 PM Morning Study: 5 AM to 6.15 AM) கட்டாயமாக பின்பற்ற வேண்டும். இந்த நேரங்களில் மாணவியர் சேர்ந்துபடிக்க அனுமதிக்கப்படமாட்டாது.

11. மாணவிகள் புடவை, பாவாடை தாவணி, சுடிதார், பைஜாமா, துப்பட்டா தவிர வேறு உடைகள் அணிய அனுமதியில்லை.

12. மாணவிகள் செல்போன், டிரான்சிஸ்டர், வாக்மேன் மற்றும் வேறு எந்த விதமான மின் சாதனங்களையும் விடுதியில் உபயோகிக்க அனுமதியில்லை. விடுதி மற்றும் கல்லூரி விதிமுறைகளை மீறி கைபேசி (மொபைல் போன்) வைத்து இருந்தால், அதனால் வரும் விளைவுகளுக்கு கல்லூரி நிர்வாகம் எந்தவகையிலும் பொறுப்பாகாது.

13. கல்லூரி விடுதி விதிகளுக்கு புறம்பாக நடக்கும் மாணவியை உடனடியாக கல்லூரி விடுதியிலிருந்து வெளியேற்றப்படுவர் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

14. மாணவிகள் மருத்துவ சம்பந்தமாக மருத்துவரை பார்க்கவேண்டியிருந்தால் நான்காவது சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் டாக்டரிடம் அனுமதி வாங்கிக் கொள்ளவும்.

15. பெற்றோர்கள் மாணவிகளை அழைத்துச் செல்ல வரும்பொழுது தங்களுடைய அடையாள அட்டையை கண்டிப்பாக கொண்டுவர வேண்டும்.

16. கல்லூரி அறிவிக்கும் விடுமுறை நாட்களைத் தவிர எக்காரணம் கொண்டும் மாணவியர் விடுமுறை எடுக்க அனுமதி இல்லை. மேலும் வகுப்பு நேரங்களில் வீட்டிற்கு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

17. விடுதியில் சேரும் போது அளிக்கப்பட்ட விடுதி விதிமுறைகளை பெற்றோரும் மாணவியரும் கட்டாயம் படிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.